ISSN No.: 2582-5275

# மக்கள் விசாரணை

# MAKKAL VISARANAI

Tamil Monthly

தமிழ் மாத இதழ்

மலர்: 14 இதழ்: 5 செப்டம்பர் – 2025 விலை : ₹10 சென்னை

Volume.: 14 Issue: 5 SEPTEMBER - 2025 Price : ₹ 10 Chennai



# தேசிய அளவில் கல்வியில் சிறந்து விளங்கும் தமிழகம்



SPINAL
CURE
இல்லத்தரசிகளே!
குடும்ப ஆரோக்கியம்
இனி உங்கள் கையில்
Qualifications
• 12TH or EQUIVALENT
• ANY DEGREE
CASMA
CLASSICAL ACUPUNCTURE SCIENCE
Diploma and certification courses
Courses:
• ADVANCE DIPLOMA IN ACUPUNCTURE
• DOCTOR OF MEDICINE IN ACUPUNCTURE
CERTIFICATION
BSS- NDA.GVT.OF INDIA DELHI
WORLD SKILL COUNCIL LONDON
WITH -CASMA
மருந்து ( Without Medicine ), அறுவை சிகிச்சை ( Without Surgery ),
மற்றும் உணவு கட்டுப்பாடு ( Without Diet Restriction ), இல்லாமல்
நோய்களை எளிதில் குணப்படுத்துவது எப்படி என்பதை
நீங்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளலாம்.
ADMISSION GOING ON
Language: Tamil / English
Prof. Healer R.BASHEER BASHA
BSC., M.DIPLOMA IN (ACU) BSS, M.DIPLOMA IN CLASSICAL (ACU) JSS, DOCTOR OF MEDICINE ACUPUNCTURE MD (ACU) OIUCM, (COLOMBO SRI LANKA), GENERAL SECRETARY, CASMA
+91-81480 38363/ 90876 28476
424/797 , kola Perumal School Street, P.H.Road
Arumbakkam, Chennai -600106 (Near DG Vaishnav College)




தாய்மொழி தமிழில்
கிளாசிக்கல் அக்குபஞ்சர் அறிவியலை
பயின்று பயிற்சி பெற விருப்பமா?
→ Without medicine
→ without surgery
→ without diet
You can recover yourself with classical acupuncture science.
( Full Details- check Description )
Qualifications
• 12TH or EQUIVALENT
• ANY DEGREE
1 Year Course
CLASSICAL ACUPUNCTURE SCIENCE
Certification
BSS- NDA.GVT.OF INDIA DELHI
WORLD SKILL COUNCIL LONDON
WITH -CASMA
Language: Tamil / English
ADMISSION GOING ON
WhatsApp For Registration
+91-81480 38363/ 90876 28476
ARUMBAKKAM, CHENNAI
SPINAL
CURE

வாழ்க தமிழ்!

வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

மாத இதழ்

ஆண்டு: 14 இதழ்: 5 செப்டம்பர் 2025

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன், B.A., M.A., Ph.D.(Hons).

முதன்மை ஆசிரியர்: V. அருணாச்சலம்

ஆசிரியர் குழு:
சிவயோகி மவுரியன்,
State President - All India Small Newspaper Association (TN)
கவிஞர் ஆ.முருகையன்,
S.சரவணன்

இதழியல் ஆலோசகர்
P.ஆறுமுகம், B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

துணை ஆசிரியர்கள்
M.தரணிகாந்த், S.அனந்தகிருஷ்ணன், வீர ஆறுமுகம், E.தாமோதரன், P.ராஜேஷ் Dr. M.சத்தியராஜ், D.ரவி, AE.மனோகரன், M.சின்னதுரை, பா. சே.கண்ணன், தென்னாங்கூர் வெங்கடேசன் P.C. தங்கராஜ், M.ரூபன் M.கந்தசாமி, A.அவினாஷ் விக்ரம் D. ரமேஷ் V.S.நாகமூர்த்தி

முதன்மை செய்தியாளர்கள்
A.N.சேதுராமன் சென்னை, R.ஜெயா, தி.மலை, B.ஞானவேல் தி.மலை, M.இப்ராஹிம், B.வேந்தன், S.விஜய் R.பத்மநாபன்

நிருபர்கள்
S.ஏழுமலை, S.நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, அகிலாண்டேஸ்வரி, குருதேவ், C. அன்பழகன்

சட்ட ஆலோசகர்:
M.ராஜசேகரன், M.A, B.L.,

புகைப்பட நிருபர் : S.அருணாச்சலா

Design : GRACE DESIGNS 9940211538

நிர்வாக அலுவலகம்:

மக்கள் விசாரணை
# 6/56 Annamalai Nagar. 1st Street
Mettupalayam westmampalam chennai - 600033
writermouriyan@gmail.com
www.makkalvisaranai.com
9840482245, 9382133334

☼ நமது மக்கள் விசாரணை இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை மற்றும் செய்திகளில் வெளியாகும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
☼ மக்கள் விசாரணை பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*

## தலையங்கம்

# தங்கநகைகளின் விலை உயர்வு

ஒரு டாலருக்கு ரூ.88 என வரலாறு காணாத அளவில் இந்திய ரூபாய் சரிந்துள்ளது. வழக்கமாக உலக நாடுகள், தங்களிடம் கையிருப்பில் உள்ள தங்கத்தை வைத்து கரன்சியை அச்சடிப்பார்கள். ஆனால் உலக நாடுகள் டாலரில் வர்த்தகம் செய்வதால் அமெரிக்கா, எந்த கணக்குமின்றி டாலரை அச்சடித்து வர்த்தகம் செய்கிறது. இதனால் உலகம் முழுவதும் உள்ள பெரிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடாக கருதுவதால் தொடர்ந்து தங்கத்தை வாங்கி குவிக்கிறார்கள். இதனால் தங்கத்திற்கான தேவை அதிகரித்துள்ளது. இதுவே விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது.

சாதாரண மக்களை பொருத்தவரை தங்கம் என்பது ஒரு முதலீடு மட்டும் கிடையாது. அவசர பண தேவைக்கு உடனடியாக அடகு வைத்து பணமாக மாற்றக்கூடிய ஒரு பொருள். நடுத்தர குடும்பங்களுக்கு அவசர பண தேவை ஏற்பட்டால் உடனடியாக வங்கிகளிலோ அல்லது நிதி நிறுவனங்களிடமோ தங்கத்தை அடகு வைத்து பணமாக மாற்றிக் கொள்வார்கள்.

தனிநபர் கடன், வீட்டுக்கடன், கிரெடிட் கார்டு உள்ளிட்டவற்றுடன் ஒப்பிடும்போது, நகையை அடகு வைத்து கடன் வாங்குவது எளிமையானதாக இருக்கிறது. அந்த வகையில் இந்தியாவில் மற்ற கடன்களோடு ஒப்பிடும்போது 2025ம் ஆண்டில் தங்கத்தின் மீது கடன் வாங்கும் போக்கு அதிகரித்து இருக்கிறதாம். 2025 மார்ச் மாதம் நிலவரப்படி இந்தியாவில் தங்க நகைகளின் மீது வாங்கப்பட்டிருக்கும் கடன்களின் மொத்த மதிப்பு ரூ.2.08 லட்சம் கோடி. இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 1.3 லட்சம் கோடி ரூபாயாகத்தான் இருந்தது.



**முனைவர்.சிவயோகி மவுரியன்**
ஆசிரியர்



# தேசிய அளவில் கல்வியில் சிறந்து விளங்கும் தமிழகம்: பள்ளிக்கல்வித் துறை சாதனைகள் குறித்து அரசு பெருமிதம்

எண்ணும் எழுத்தும் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களால் தேசியளவில் பள்ளிக்கல்வியில் தமிழகம் சிறந்து விளங்குவதாக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்துக்கென பிரத்யேக மாநிலக் கல்விக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. இது சமத்துவமான, குழந்தைகளை எதிர்காலத்துக்கு தயார்ப்படுத்தும் சிறந்த கல்வி முறைக்கான திட்ட வரைவை அடிப்படையாக கொண்டுள்ளது.

கரோனா கால கற்றல் இடைவெளியை சரிசெய்வதற்காக இல்லம் தேடிக் கல்வித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு 202122ம் கல்வியாண்டு முதல் ரூ.660.35 கோடி ஒதுக்கீடு செய்து 1.65 லட்சம் தன்னார்வலர்கள் மூலம் 34 லட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். அரசுப் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு முதல்வரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024–25ம் கல்வியாண்டு முதல் 17.53 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளிடம் அடிப்படைக் கல்வியறிவு, எண்ணறிவை மேம்படுத்த ‘எண்ணும் எழுத்தும்’ திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 25.08 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறன் மாணவர்களை அடையாளம் கண்டு சிறப்புக் கல்வி வழங்க நலம் நாடி செயலி பயன்படுத்தப்படுகிறது. பள்ளியிலேயே 76 லட்சத்து 56,074 மாணவர்களுக்கு ஆதார்



புதுப்பித்தல் மற்றும் புதிய ஆதார் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 28,067 அரசுப் பள்ளிகளில் 100 எம்பிபிஎஸ் வேகத்தில் இணையவசதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பள்ளிகளில் இணைய சேவை ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுதவிர அரசுப் பள்ளிகளில் பயிலும் 16 லட்சத்து 77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.455 கோடியில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் **(Smart Classroom)** அமைக்கப்பட்டுள்ளன. 79,723 இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.81 கோடியில் கையடக்கக் கணினிகள் **(Tablet)** தரப்பட்டுள்ளன. 11, 12ம் வகுப்புக்கான தொழிற்கல்விப் பாடத்திட்டம் சீரமைக்கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடம் அறிவியல் ஆர்வத்தை தூண்டும் வகையில் நடமாடும் அறிவியல் ஆய்வகத் திட்டம் (வானவில் மன்றம்) ரூ.11.69 கோடியில் 33.50 லட்சம் பேர் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2022–23 மற்றும் 202324ம் கல்வியாண்டுகளில் 614 உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளுக்கு ரூ.1087.76 கோடியும், 2,455 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.800 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டு, வகுப்பறைக் கட்டங்கள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

இதுதவிர 2024–25ல் 440 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.745 கோடியும், பராமரிப்பு பணிக்கு ரூ.200 கோடியும் 526 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.284 கோடியும் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது 2025–26ம் கல்வியாண்டில் 567 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.734.55 கோடியும் பராமரிப்பு பணிகளுக்கென ரூ.200 கோடியும் 182 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.110.71 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்காரணங்களால் சிறந்த தரமான பள்ளிக்கல்வியை வழங்குவதில் தேசியளவில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


# கல்வி, சுகாதாரத்துக்கான நிதி ஒதுக்கீட்டை திமுக அரசு குறைத்துவிட்டது

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளுக்கான நிதியை திமுக அரசு குறைத்துவிட்டது என குற்றம் சாட்டியுள்ள பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், திமுக அரசு அனைத்துத் துறைகளிலும் தோல்வியடைந்து விட்டது என்று விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் தமிழ்நாடு மிகவும் பின்தங்கியுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன. ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு கல்வி, சுகாதாரம், வேளாண்மை ஆகிய 3 துறைகள் தான் மிகவும் முக்கியம் என்று கூறப்படும் நிலையில், அவற்றுக்கு சராசரியாக ஒதுக்கப்பட வேண்டியதை விட குறைவான நிதியை தமிழகம் ஒதுக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது.

மத்திய, மாநில அரசுகள், நாடாளுமன்றம், சட்டப்பேரவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து வரும் பி.ஆர்.எஸ் இந்தியா தொண்டு நிறுவனம் மாநிலங்களின் நிதிநிலை (ஷிஜிகிஜிணி ளிதி ஷிஜிகிஜிணி திமிழிகிழிசிணிஷி) என்ற தலைப்பில் 2024, 25ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாநிலத்தின் நிதிநிலையும் எவ்வாறு இருந்தது? ஒவ்வொரு துறைக்கும் சராசரியாக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றன என்பது தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் உள்ள தகவல்கள் அதிர்ச்சியளிப்பவையாக உள்ளன.

மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படும் துறைகளில் கல்வி தான் மிகவும் முக்கியமானது என்பதால், பள்ளிக்கல்வி, உயர்க்கல்வி ஆகிய இரண்டுக்கும்



சேர்த்து, மாநிலத்தின் மொத்த பட்ஜெட்டில் குறைந்தது 15% ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால், தமிழ்நாடு அதை விடக் குறைவாக 13.7% மட்டுமே ஒதுக்கியுள்ளது.

இந்தியாவிலேயே மிகவும் அதிக அளவாக டெல்லி அரசு கல்விக்காக அதன் மொத்த பட்ஜெட் மதிப்பில் 24.2% ஒதுக்கியுள்ளது. இந்தியாவின் பின்தங்கிய மாநிலமான பிஹார் 21.4% ஒதுக்கீடு செய்திருக்கிறது.

சுகாதாரத்துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் தமிழ்நாடு 26ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையின் குறைந்தபட்சத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மொத்த செலவில் குறைந்தது 8% ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று 2017ஆம் ஆண்டின் தேசிய சுகாதாரக் கொள்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டெல்லி மாநில அரசு இந்த இலக்கைக் கடந்து மருத்துவத்திற்காக 13% நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. அண்டை மாநிலமான புதுச்சேரி 9.5% நிதியை

சுகாதாரத்திற்காக செலவழிக்கிறது. ஆனால், வளர்ந்த மாநிலமாக கூறிக் கொள்ளும் தமிழ்நாடு சுகாதாரத்திற்கு வெறும் 5% மட்டுமே ஒதுக்குகிறது.

முதன்மைத் துறையான வேளாண்மைக்கு குறைந்தபட்சம் 6.3% நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால், தமிழகம் அதைவிடக் குறைவாக வெறும் 6.1% மட்டும் தான் ஒதுக்கீடு செய்கிறது. வேளாண்மையில் சிறந்து விளங்கும் தெலுங்கானா (20.20%), சத்தீஸ்கர் (15.90%) பஞ்சாப் (10.10%) ஆகிய மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழ்நாடு மிகக் குறைந்த நிதியை மட்டுமே ஒதுக்கீடு செய்திருக்கிறது.

கல்வி, சுகாதாரம், வேளாண்மை ஆகிய துறைகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படாததற்கு பற்றாக்குறையை ஒரு காரணமாகக் கூறவே முடியாது. ஒரு மாநில அரசிடம் எவ்வளவு நிதி உள்ளதோ? அதில் எத்தனை விழுக்காடு இந்தத் துறைகளுக்கு ஒதுக்கப்படுகிறது? என்பது தான் பாமக எழுப்பும் வினா ஆகும்.

தமிழக அரசின் மொத்த செலவில் இந்தத் துறைகளுக்கு குறைந்த விழுக்காடு நிதியை ஒதுக்கியதன் மூலம் அரசு அதிக வீண் செலவு செய்கிறது; முதன்மைத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதில்லை என்பது உறுதியாகிறது.

கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்து வந்தாலும், அதை செயல்படுத்தவில்லை என்பது தான் உண்மை. ‘‘மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **(Gross State Domestic Product-GSDP)** கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு ஒதுக்கப்படும் நிதியின் அளவு 3 மடங்காக உயர்த்தப்படும்’’ என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இந்த வாக்குறுதி பத்தாண்டுகளில் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

திமுக ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக 2020 21ஆம் ஆண்டில் பள்ளிக்கல்விக்கான ஒதுக்கீடு ரூ.34 ஆயிரத்து 181 கோடியாகவும், சுகாதாரத்திற்கான ஒதுக்கீடு ரூ.15 ஆயிரத்துக்கு 863 கோடியாகவும் இருந்தது. இது 2020 21ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பான ரூ.20, 65 ஆயிரத்து 436 கோடியில் முறையே 1.65%, 0.76% ஆகும்.

அதையே 202425ஆம் ஆண்டுக்கு கணக்கிட்டால் கல்விக்கான ஒதுக்கீடு ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 271 கோடி ரூபாயாகவும், சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு 60 ஆயிரத்து 577 கோடி ரூபாயாகவும் இருக்க வேண்டும். ஆனால், அந்த ஆண்டில் கல்விக்கு ரூ.44,042 கோடியும், சுகாதாரத்திற்கு ரூ.20,198 கோடியும் மட்டுமே ஒதுக்கீடு செய்திருக்கிறது திமுக அரசு. இது திமுக ஒதுக்குவதாக கூறிய தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவு ஆகும்.

அதிமுக ஆட்சியில் கல்விக்கு ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 1.65% நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், திமுக ஆட்சியில் இப்போது அது 1.39% ஆக குறைந்து விட்டது. அதேபோல், அதிமுக ஆட்சியில் 0.76% ஆக இருந்த சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு 0.64% ஆக குறைந்து விட்டது. தமிழ்நாட்டில் கல்வித்துறையும், சுகாதாரத்துறையும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் சீரழிந்து வருவதற்கு போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததே காரணம்.

திமுக அரசு அனைத்துத் துறைகளிலும் தோல்வியடைந்து விட்டது; கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளை சீரழித்து விட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. திமுக அரசின் இந்த துரோகங்களுக்கு வரும் சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவர் என்பது மட்டும் உறுதி’’ இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நடிகர் விஜய் கடந்த காலத்தை மறந்து பேசக்கூடாது: அமைச்சர் அன்பில் மகேஸ்



அரசியல் கட்சி தொடங்கிவிட்டோம் என்பதற்காக விஜய் கடந்த காலத்தை மறந்துவிட்டு முதல்வரை மரியாதை குறைவாக பேசுவது சரியல்ல என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் கூறினார்.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: அறிவுசார்ந்துதான் தமிழ் மொழியை திமுக உயர்த்தி பிடிக்க நினைக்கிறது. ஆனால், பாஜக போன்ற அரசியல் கட்சிகள் தமிழ் 2,000 ஆண்டுகள் பழமையானது. சமஸ்கிருதம் போன்ற மொழிகள் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானவை எனக்கூறி நமது வரலாற்றை மறைக்கப் பார்க்கிறார்கள்.

தமிழினம் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பை பயன்படுத்தியுள்ளது. ஆனால் அதை மூடி மறைக்கும் வேலையை மத்திய அரசு செய்து வருகிறது. ஆனால், தமிழின் பெருமையை உலக அளவில் எடுத்து செல்வதற்கான முயற்சியில் திமுக இறங்கியுள்ளது. அந்த வகையில் அடுத்து ஆண்டு ஜனவரி மாதம் பன்னாட்டு புத்தக கண்காட்சிக்கு 100 நாடுகளில் இருந்து புத்தகம் மற்றும் தமிழ்மொழி மீது ஆர்வமுள்ளவர்களை வரவழைக்க திட்டமிட்டுள்ளோம்.

முதல்வர் ஸ்டாலினை நடிகர் விஜய் மரியாதை இல்லாமல் பேசியது தவறு. கருணாநிதியின் குடும்பத்துடன் விஜய் குடும்பம் நெருக்கமான உறவு கொண்டவர்கள். உதயநிதியின் நல்ல நண்பனாக இருந்தவர். ஆனால், தற்போது ஒரு அரசியல் கட்சி தொடங்கிவிட்டோம் என்பதற்காக அனைத்தையும் மறந்துவிட்டு பேசுவது சரியல்ல. அதேபோல், திமுகவை வேரோடு பிடுங்கி எறிய வேண்டுமென மத்திய அமைச்சர் அமித் ஷா கருத்து கூறியுள்ளார்.

அமித் ஷாவுக்கு தமிழகத்தின் அரசியல் பற்றி தெரியவில்லை. 75 ஆண்டுகள் பழமையான கட்சி திமுக. 4 தலைமுறைகளையும் சேர்ந்த தொண்டர்கள் திமுகவில் உள்ளனர். அவர்களுக்கு இருக்கும் அரசியல் சிந்தனை தெளிவானவை. மேலும் திமுக கல்வி, சமூகநீதியுடன் சேர்ந்து வளர்ந்த அரசியல்கட்சி. அவ்வளவு எளிதில் அசைக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

# ஸ்டேம் செல்...STEM CELL... தாயத்து....என்ன தொடர்பு?

சமீப காலமாக தனியார் மருத்துவமனைகளில் ஒருவருக்கு குழந்தை பிறக்கிறது என்றால் உங்கள் குழந்தையின் ஸ்டெம்செல்லை அதாவது தொப்புள்கொடியை நாங்கள் சேமிக்கலாமா என்றொரு கேள்வி மருத்துவமனை சார்பாக முன்வைக்கப்படுகிறது.

அப்படி தொப்புள்கொடியை சேமிக்க அவர்கள் வசூலிக்கும் தொகை சில லட்சங்கள் வரை தொடுகிறது. தொப்புள்கொடியை எதற்காக இவ்வளவு செலவு செய்து சேமிக்க வேண்டும் என்றால் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களான பிறகு அவர்களுக்கு கேன்சர் போன்ற குணப்படுத்த முடியாத நோய்கள் வந்தால் இந்த தொப்புள்கொடியில் உள்ள செல்களை வைத்து எந்த நோயை வேண்டுமானாலும் குணப்படுத்திவிடலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பைசா செலவில்லாமல் நம் முன்னோர்கள் ஒரு சின்ன தாயத்து மூலமாக இந்த ஸ்டெம்செல் வைத்தியத்தை செய்து வந்தனர் என்றால் நம்புவீர்களா?

அந்த காலத்தில் குழந்தை பிறந்த சில நாட்களில் தொப்புள்கொடி காய்ந்து விழுந்தவுடன் அதை பத்திரமாக எடுத்து அதை ஒரு தாயத்தில் அடைத்து குழந்தையின் கழுத்திலோ அல்லது இடுப்பிலோ கட்டி விடுவார்கள்.

அல்லது குழந்தை பிறந்தவுடன் தொப்புள்கொடியை அறுத்து அதை நன்கு பிழிந்து சில நாட்கள் நன்றாக காய வைத்து அதை நன்கு அரைத்து பொடியாக்கி பின்பு அந்த பொடியை ஒரு தாயத்தில் அடைத்து அதை இடுப்பிலோ அல்லது கழுத்திலோ கட்டி விடுவார்கள்.

பிற்காலத்தில் அந்த குழந்தை வளர்ந்து பெரியவரானதும் ஏதேனும் கொடிய நோய் தாக்கினால் வைத்தியர்கள் அந்த தாயத்தில் உள்ள தொப்புள்கொடி பவுடரை எடுத்து அதை நீரிலோ அல்லது பாலிலோ கலந்து






கொடுப்பார்கள். சில நாட்களில் நோயும் பறந்து போகும்.

இன்றளவும் இந்த தொப்புள்கொடி தாயத்து பழக்கம் சில வீடுகளில் உண்டு. ஆனால் பெரும்பாலான வீடுகளில் இந்த பழக்கம் தற்போது இல்லை என்பதுதான் வருத்தம்.

இவ்வளவு தெளிவான நம் முன்னோர்களின் அறிவியலை மூடநம்பிக்கை என்று நம் மனதில் பதியவைத்து தாயத்து எல்லாம் அசிங்கம் அதையெல்லாம் கட்டுவது வீண் என்று சொல்லி நம்மை முட்டாளாக்கி இன்று சில வெளிநாட்டு நிறுவனங்கள் நமது முன்னோர்களின் கண்டுபிடிப்பிற்கு ஸ்டெம்செல் தெரபி என்று அதற்கு பெயர் வைத்து அதை நமக்கே விற்கின்றனர்

உண்மையில் இன்று நாம் முட்டாளா இல்லை நம் முன்னோர்கள் முட்டாளா என்று சிந்தித்து பாருங்கள்... தமிழர்களே... இனியாவது விழிப்போம். நமது முன்னோர்களின் அறிவியலை மீண்டும் தோண்டி எடுப்போம்.!!

# பதிவு தபால் சேவையை நிறுத்தி விரைவு தபால் சேவையுடன் இணைப்பு




**இந்திய அஞ்சல்துறையில் பதிவு தபால் சேவையை செப்.1ம் தேதி முதல் நிறுத்தி, விரைவு தபால் சேவையுடன் இணைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியான நிலையில், இது தற்போது அக்.1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளதாக அஞ்சல் துறை தெரிவித்துள்ளது.**

இந்திய அஞ்சல் துறை சேவை ''கம்பெனி மெயில்'' என்ற பெயரில் கடந்த 1766ம் ஆண்டு கிழக்கு இந்திய கம்பெனி ஆட்சியில் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரால் தொடங்கப்பட்டது. இது, 1854ம் ஆண்டு டல்ஹவுசி பிரபுவால் சீரமைக்கப்பட்டு, அஞ்சல் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவே அதிகாரப்பூர்வ இந்திய அஞ்சல் துறை தொடங்கப்பட்ட ஆண்டாக கருதப்படுகிறது.

தற்போது, இந்திய அஞ்சல் துறையில் 1.59 லட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் நிலையங்கள் உள்ளன. இதன்மூலம், உலகின் மிகப்பெரிய அஞ்சல்துறையாக இந்திய அஞ்சல்துறை செயல்படுகிறது. இந்திய அஞ்சல் துறை மூலமாக பல்வேறு

# அக்.1 முதல் அமல் அஞ்சல்துறை தகவல்

சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும் நிலையில், இவற்றில் பதிவு தபால் சேவை முக்கியமானதாக இருக்கிறது. பதிவு தபால் சேவை கடந்த 1854ல் இந்திய அஞ்சல் துறையால் அறிமுகப்படுத்தப்பட்டது.

நீதிமன்றம், வங்கி, அரசு துறை சார்ந்த கடிதங்கள் உள்ளிட்டவை பதிவு தபால்கள் மூலம் அனுப்பப்படுகின்றன. முக்கிய ஆவணங்கள், சான்றுகளை அனுப்பும் போது, வாடிக்கையாளர்களின் முதல் தேர்வாக பதிவு தபால்கள் இருக்கின்றன. அதாவது, பதிவு தபால் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவரே பெற முடியும் என்பது இதன் தனிச்சிறப்பாகும். பாதுகாப்பான ஆவண விநியோகத்துக்கு பதிவு செய்யப்பட்ட அஞ்சல் நம்பகமான சேவையாக இருக்கிறது.

இதற்கிடையில், அஞ்சல் செயல்பாடுகளை நவீனமயமாக்கும் நோக்கில், 171 ஆண்டு கால சேவையாக திகழும் பதிவு தபால் சேவையை செப்.1ம் தேதி முதல் நிறுத்தப்பட உள்ளதாகவும், விரைவு தபால் சேவையுடன் இணைக்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியானது.

அதாவது, டிஜிட்டல் விருப்பங்களால், பதிவு செய்யப்பட்ட தபால் பயன்பாடு குறைந்துள்ளதாகவும், மேம்பட்ட கண்காணிப்பு, வேகமான விநியோக நேரம் மற்றும் சிறந்த செயல்பாட்டுத் திறன் கொண்ட விரைவு தபால் சேவையுடன் இணைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பதிவு தபால் சேவையை நிறுத்தி, விரைவு தபால் சேவையுடன் இணைக்கும் நடவடிக்கை அக்.1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளதாக அஞ்சல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, இந்தியஅஞ்சல் துறை அண்மையில் வெளியிட்ட ஒரு சுற்றறிக்கை: முகவரி சார்ந்த விநியோகத்துக்கான அடிப்படை தபால் சேவையாக விரைவு தபால் கடிதம் மற்றும் விரைவு தபால் பார்சல் ஆகியவை இனிமேல் இருக்கும். பதிவு தபால் என்பது விரைவு தபால்களுக்கு மட்டுமே மதிப்பு கூட்டப்பட்ட சேவையாக கிடைக்கும்.

முகவரிதாரருக்கு குறிப்பிட்ட விநியோகத்தை வழங்கும். பிற வகை தபால்களுக்கு பதிவு கிடைக்காது. வளர்ந்து வரும் சந்தை தேவைகள் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இது மாற்றப்பட்டு வரவுள்ளது.

விரைவு தபால் மற்றும் பதிவு உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட சேவைக்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், பொருந்தக்கூடிய கட்டணங்கள் மற்றும் சேவை விதிமுறைகள் அவ்வப்போது துறையால் அறிவிக்கப்படும். இந்த புதிய நடைமுறை அக் .1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, அஞ்சல் துறை அதிகாரிகள் கூறுகையில்,‘‘பதிவு தபால் என்பது சம்பந்தப்பட்டவரிடம் நேரிடையாக விநியோகிப்பது ஆகும். விரைவு தபால் என்பது சம்பந்தப்பட்டவரிடம் முகவரியில் இருப்பவரிடம் கொடுத்துவிடலாம். புதிய உத்தரவு மூலமாக, விரைவு தபாலில், மதிப்பு கூட்டப்பட்ட சேவையாக பதிவு தபால் வழங்கப்பட உள்ளது. தற்போது, விரைவு தபாலுடன் பதிவு தபால் சேவை இணைப்பது மூலமாக, வாடிக்கையாளர்களுக்கு ஒருங்கிணைந்த அஞ்சல் சேவைகள் கிடைக்கும்’’ என்றனர்.

# சிறுநீரகங்களை பலப்படுத்தும் "மகரமுத்திரை"



உள் உறுப்புகள், பலமாக இருந்தால் தான், அதன் வழியாக செல்லும் குண்டலினி சக்தி ஆதார சக்கரங்களை கடந்து செல்லும். சிறு நீரகத்தினை பலமாக்க மகர முத்திரை.

மகர முத்திரை "மகரம்" என்றால் சமஸ்கிருதத்தில் "முதலை" என்று பொருள். எவ்வாறு முதலையானது மிக்க சக்தியோடு இருக்கிறதோ அவ்வாறு சாதகனையும் சக்திமிக்கவனாக்குவது இம்முத்திரை.

மகர முத்ரா என்பது சம்யுக்த ஹஸ்தா (இரட்டை கை) முத்திரையாகும். இது நடைமுறைக்கு இரு கைகளையும் பயன்படுத்தும் சைகை உள்ளங்கைகள் ஒன்றின்மேல் ஒன்றாக ஓய்வெடுத்து, உடலுக்குள் ஆற்றல் செலுத்த உதவுகிறது.

இது, அமைதி, திருப்தி, சந்தோஷம் போன்றவற்றையும், தன்னம்பிக்கையையும் தரவல்லது.

மகர முத்ரா(முதலை முத்ரா) முதுகுத்தண்டின் அடிப்பகுதிக்கு அருகில் அமைந்துள்ள ஸ்வாதிஸ்தான சக்கரத்தை (சாக்ரல் சக்ரா) தூண்டுவதற்க்கும் சேமிக்கப்பட்ட சக்திகளை வெளியிடுவதற்க்கும் உடலை உற்சகப்படுத்துவதற்க்கும் பயிற்ச்சி செய்யப்படுகிறது.

செய்முறை

இடது உள்ளங்கையை வலது உள்ளங்கை மேல் வைக்கவும். வலது கட்டை விரலை (அக்னி தத்துவம்) இடது சுண்டு விரல் (நீர் தத்துவம்) மற்றும் மோதிர விரல்களுக்கிடையே ( நிலத்தத்துவம்) நுழைத்து இடது உள்ளங்கையின் நடுப்பகுதியில் வைக்கவும். இடது மோதிர விரல் இடது மோதிரவிரலால் இடது கட்டை விரலைத் தொடவும். மற்ற விரல்களை படத்தில் காட்டியுள்ளது போல் வைக்கவும். இதுவே "மகர முத்திரை" ஆகும்.

முத்ரா பயிற்சியின் போது முன்னெச்சரிக்கைகள்



முத்ராவின் முழு பலனைப் பெற ஆசனங்களுடன் பயிற்சி செய்யும் போது முழு ஆழமான சுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

மகர முத்ராவைப் பயன்படுத்துவது பாதுகாப்பானது மற்றும் பயனுள்ளது என்றாலும், நீண்ட காலத்திற்கு அதைப் பயிற்சி செய்வது தவிர்க்கப்பட வேண்டும். இந்தப் பயிற்சியானது உடலில் ஆற்றலையும் வெப்பத்தையும் அதிகரிப்பதால், மெதுவாகவும் சீராகவும் செல்வது பாதுகாப்பானது.

முத்ராவின் விளைவுடன், இந்த நடைமுறை கை ரிஃப்ளெக்சாலஜியுடன் தொடர்புடையது, எனவே மாணவர்களின் சுகாதார நிலைமைகளைப் புரிந்துகொள்வது அவசியம். இதயம் தொடர்பான நிலைமைகள், சிறுநீரகம் அல்லது கணையம் தொடர்பான, இரத்த அழுத்தம் போன்றவை உள்ள மாணவர்கள், மகர முத்திரையை நீண்ட நேரம் வைத்திருக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நரம்பு மண்டலத்தை (உள்ளங்கைகள் மற்றும் விரல்களின் நுனிகளில் அழுத்தம் புள்ளிகள்) செயல்படுத்தும் அதே வேளையில், இந்த நடைமுறையில் விரைவாக உருவாகும் வெப்பத்துடன், மேலே விவரிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் கவனமாக இருக்க வேண்டும்.

ஆற்றலைக் கட்டியெழுப்புவதை உள்ளடக்கிய ஒரு கடினமான யோகா பயிற்சிக்குப் பிறகு உடனடியாகப் பயிற்சி செய்யக்கூடாது, ஏனெனில் இந்தப் பயிற்சியானது உடலில் ஆற்றலை அதிகரிப்பதையும் உள்ளடக்கியது. இது உடலில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும், இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

பலன்கள்

செறிவு சக்தியை மேம்படுத்துகிறது.

இது ஒருவரின் கவனிக்கும் திறனை பெரிதும் அதிகரிக்கிறது.

இந்த முத்திரை உங்களை உடல் மற்றும் மனதளவில் ஃபிட்டாக வைத்துக் கொள்ள உதவும்

வாழ்க்கையில் உடலை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இளமையாகவும் வைத்துக் கொள்ள உதவும்.

இது தன்னம்பிக்கை, பாதுகாப்பு உணர்வு, கவனம், வலிமை, உணர்ச்சிகள் மீது சிறப்புக் கட்டுப்பாடு போன்றவற்றை அதிகரிக்கிறது.

இதை செய்து வந்தால் சைனஸ் பிரச்சனையில் இருந்தும் நிவாரணம் பெறலாம்.

சிறுநீரக செயல்பாட்டை தூண்டுகிறது.

சிறுநீர்ப்பை மற்றும் நரம்புகளை நன்கு செயல்பட செய்கிறது.

கண்களை சுற்றியுள்ள கருவளையம் குறையும்.

காலம்

தினம் காலை, மாலை 10 நிமிடங்கள் வீதம் மகர முத்திரையைச் செய்து வரலாம். மகர முத்திரை செய்துவிட்டு அரைமணி நேரம் கழித்து ப்ராண முத்திரையையும் செய்து வந்தால் பலன் அதிகம்.



# மக்கள் மீது முதல்வர் ஸ்டாலினுக்கு அக்கறை கிடையாது

முதல்வர் ஸ்டாலினுக்கு எப்போதும் குடும்ப சிந்தனைதான். வாக்களித்த மக்கள் மீது அவருக்கு அக்கறை கிடையாது என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார். 'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் பழனிசாமி, திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதியில் நேற்று பொதுமக்களிடையே பேசியதாவது: அதிமுக ஆட்சியில் வறட்சியின்போது விவசாயிகளுக்கு ரூ.2,400 கோடி நிவாரணம் வழங்கினோம். இந்தியாவிலேயே அதிக உணவு தானிய உற்பத்தியை பெருக்கி, தமிழகம் முதலிடம் வகித்ததற்கு அதிமுக ஆட்சியின் நிர்வாகத் திறமையே காரணம்.

திமுக எம்எல்ஏ மருத்துவமனையில் கிட்னி அறுவை சிகிச்சையில் முறைகேடு நடந்ததாக ஐஏஎஸ் அதிகாரி தலைமையிலான மருத்துவக் குழுவினர் கண்டறிந்து, அந்த மருத்துவமனைக்கு உடல் உறுப்பு அறுவை சிகிச்சைக்கான அனுமதியை ரத்து செய்தனர். ஆனால், பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடல் உறுப்பு திருட்டு தொடர்பாக அடுத்து அமையும் அதிமுக ஆட்சியில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிமுக கோரிக்கையை ஏற்று காவிரியை தூய்மைப்படுத்த 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தை பிரதமர் மோடி அறிவித்தார். திமுக ஆட்சியில் அந்த திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டனர்.

அதிமுக தொடர்ந்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்ததால், மத்திய அரசு நடப்பாண்டு ‘நடந்தாய் வாழி காவிரி’ திட்டத்தை அனுமதித்து, அதற்கு ரூ.11,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. காவிரி, பவானி, அமராவதி, நொய்யல் மற்றும் கிளை ஆறுகளில் வரும் நீர் சுத்திகரிக்கப்பட்டு, மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்க வழிவகை செய்தது அதிமுக அரசு. மேலும், 40 லிட்டர் பால் தரும் வகையில் கலப்பின பசுக்களை உருவாக்கும் கால்நடை பூங்காவை சேலம் மாவட்டம் தலைவாசலில் ரூ.1,000 கோடியில் அமைத்தோம். அந்த திட்டத்தை திமுக அரசு கிடப்பில் போட்டது. மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்தால், அத்திட்டத்தை செயல்படுத்தி, கலப்பின பசுக்களை உருவாக்கி, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவோம்.

திமுக அரசு ஏழைகளுக்காக ஏதாவது ஒரு திட்டம் கொண்டுவந்ததா? முதல்வர் ஸ்டாலினுக்கு எப்போதும் தனது குடும்பத்தைப் பற்றிய சிந்தனைதான் உள்ளது. வாக்களித்த நாட்டு மக்களைப் பற்றி அவருக்கு அக்கறை கிடையாது. தொழிலாளி, விவசாயி, மாணவர் என ஒட்டுமொத்த மக்களுக்கும் அதிமுக ஆட்சியில் பலன் கிடைத்தது. ஆனால், தற்போது கருணாநிதி குடும்பம் தான் பிழைக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# பொறியியல் கலந்தாய்வு முடிவில் 37,000 இடங்கள் காலி



பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கை கலந்தாய்வு முடிவில் 37,179 இடங்கள் காலியாக உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. தமிழகத்தில் அண்ணா பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும் 423 பொறியியல் கல்லூரிகளில் இளநிலை படிப்புகளுக்கு ஒரு லட்சத்து 90,624 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் உள்ளன. இவற்றை நிரப்புவதற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு நிறைவடைந்த நிலையில் மீதமுள்ள காலி இடங்களை நிரப்புவதற்கான துணை கலந்தாய்வு ஆக. 21ம் தேதி தொடங்கியது.

இதில் பங்கேற்க 20,662 மாணவர்கள் தகுதிபெற்றனர். அவர்களில், விருப்பக் கல்லூரியை தேர்வு செய்தவர்களுக்கான இறுதி ஒதுக்கீடு ஆணை நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி, பொதுப் பிரிவில் 7,767 பேர், தொழிற்கல்வி பொதுப் பிரிவில் 165 பேர், 7.5 சதவீத ஒதுக்கீட்டில் 32 பேர் என 7,964 பேருக்கு துணை கலந்தாய்வில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பொறியியல் கலந்தாய்வு: இறுதிகட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஒட்டுமொத்தமாக ஒரு லட்சத்து 53,445 இடங்கள் நிரம்பியுள்ளன. இன்னும் 37,179 இடங்கள் காலியாக உள்ளன. இந்நிலையில், எஸ்சி, எஸ்டி பிரிவுக்கான கலந்தாய்வு இன்று நடைபெறுகிறது.

மாணவர்கள் மாலை 7 மணி வரை தங்களுக்கான விருப்பக் கல்லூரியை தேர்வு செய்யலாம். அவர்களுக்கு தற்காலிக ஒதுக்கீடு நாளை (ஆக.26) வெளியிடப்படும். அதை உறுதி செய்பவர்களுக்கு 27ம் தேதி இறுதி ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும்.


# “எந்த நம்பிக்கையில் ஐயப்ப மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கிறார்?”



பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் நடைபெறும் இந்து மத பண்டிகைகளுக்கு வாழ்த்து கூறுவதில்லை. ஆனால் கேரள முதல்வர் பினராயி விஜயன் அழைப்பை ஏற்று உலக ஐயப்ப மாநாட்டுக்கு செல்கிறார். இது எந்தவிதமான நம்பிக்கை என அவர் கூற வேண்டும். இந்து மத உணர்வுகளை புண்படுத்தும் விதமாக முதல்வரின் செயல்கள் உள்ளன.

இந்து மதத்தை தீவிரமாக பின்பற்றுபவர் என்ற அடிப் படையில் விசிக வன்னியரசு, ராமர் குறித்து பேசியதை வன்மையாக கண்டிக்கிறேன். சமூக நீதியையும் சமத்துவத்தையும் போற்றுவது கம்பராமாயணமும் ராமரும்தான். சட்டம் ஒழுங்கு சீர்குலைவு காரணமாகவே தமிழகத்தில் சாதிய கொலைகள் நடந்து வருகின்றன.

இதனை தடுக்க தமிழகத்தில் ஏன் சிறப்பு சட்டம் கொண்டுவர முடியவில்லை? தமிழ் முகமூடி அணிந்து கொண்டு சி.பி.ராதாகிருஷ்ணன் வருகிறார் என முதல்வர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்களின் பாதுகாவலர்கள் என கூறுபவர்கள், ஏன் ஒரு தமிழரை குடியரசுத் துணைத் தலைவராக ஆதரிக்க மறுக்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# மக்களிடம் கனிவாக பேசி கோரிக்கைகளை பெற வேண்டும்

## அதிகாரிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தல்

சென்னையில் உள்ள முதல்வரின் உதவி மையத்தை ஆய்வு செய்த ஸ்டாலின், மக்களிடம் கனிவாக பேசி கோரிக்கைகளை பெறுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்தி க்குறிப்பு: சென்னை கோட்டூ ர்புரத்தில் முதல்வரின் உதவி மையம் '1100' என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கடந்த 2024 ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்துக்கு தினமும் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அழைப்புகள் வருகின்றன. மேலும், 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களில், தீர்வு காணப்பட்ட மனுக்களின் தரத்தை ஆய்வு செய்ய, தினமும் தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மையத்துக்கு நேற்று வந்த முதல்வர் ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்து, உரிய அறி வுரைகளை வழங்கினார். ''பொதுமக்களிடம் கனிவாக பேசி, அவர்களது கோரிக்கைகளை உடனு க்குடன் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி, விவரங்களை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்'' என்று அறிவுறுத்தினார். துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், முதல்வர் தனிப்பிரிவு சிறப்பு அலுவலர் த.ஜெயஷீலா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# ஜிஎஸ்டி வரி குறைப்பு அக்.2ல் அமல்: மத்திய அரசு வட்டாரங்கள் தகவல்



ஜிஎஸ்டி வரி குறைப்பு அக்டோபர் 2ம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என்று மத்திய நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தீபாவளியை முன்னிட்டு ஜிஎஸ்டி வரி குறைக்கப்படும் என்று சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி அறிவித்தார். இதுதொடர்பாக பிரதமர் தலைமையில் மூத்த மத்திய அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதன்பிறகு, பல்வேறு மாநிலங்களின் நிதி அமைச்சர்களுடன் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆலோசனை நடத்தினார்.

ஜிஎஸ்டி கட்டமைப்பில் தற்போது 5%, 12%, 18%, 28% ஆகிய 4 அடுக்கு வரி விகிதங்கள் உள்ளன. இதை 5%, 18% என இரண்டு அடுக்காக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. சில ஆடம்பர பொருட்களுக்கு மட்டும் 40 சதவீத வரி விதிக்கப்பட உள்ளது. இதற்கு மாநில அரசுகளும் ஒப்புதல் அளித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சூழலில், செப்டம்பர் 3, 4ம் தேதிகளில் தலைநகர் டெல்லியில் ஜிஎஸ்டி கவுன்சிலின் 56வது கூட்டம் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற உள்ளது. ஜிஎஸ்டி வரி விகிதங்களை குறைப்பது குறித்து இந்த கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதை தொடர்ந்து, அக்டோபர் 2ம் தேதி விஜயதசமி பண்டிகையின்போது ஜிஎஸ்டி புதிய வரி விகிதம் அமல்படுத்தப்படும். இதனால், உணவு பொருட்கள், காய்கறி, பழங்கள், மருந்துகள், கார், ஏசி, ஃபிரிட்ஜ், வாஷிங்மெஷின், டிவி, ஜவுளி, சிமென்ட் உட்பட பல்வேறு பொருட்களின் விலை கணிசமாக குறையும். சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி கூறியதுபோல, தீபாவளி பண்டிகை மக்களுக்கு இரட்டை தீபாவளியாக அமையும் என்று நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

# “தோல்வியால் துவண்டு விடக் கூடாது!” அண்ணாமலை அறிவுரை



கீரனூர் அருகே நடைபெற்று வரும் துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை பதக்கம் வழங்கினார். புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அருகே ஆவாரங்குடிப்பட்டியில் தமிழ்நாடு துப்பாக்கி சுடும் சங்கம் மற்றும் புதுக்கோட்டை ராயல் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் மாநில அளவிலான துப்பாக்கி சுடும் போட்டி கடந்த 22ம் தேதியில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

வரும் 28ம் தேதி வரை நடைபெற உள்ளது. நேற்று நடைபெற்ற போட்டியை பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை தொடங்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களை வழங்கி, பாராட்டினார்.

பின்னர் அவர் பேசியதாவது: விளையாட்டு வீரர்கள் படிப்பிலும் கவனம் செலுத்திக்கொண்டு விளையாட்டிலும் திறம்பட வளர வேண்டும். தோல்வி வந்துவிட்டது என்பதற்காக துவண்டு விடக்கூடாது. தோல்வி ஒரு நாள் வெற்றியாக மாறும். அதுவரை நாம் தொடர்ந்து பயிற்சி எடுத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்றார்.

பதக்கத்தை கையில் வாங்கிய டிஆர்பி.ராஜா மகன்: வெற்றி பெற்ற அனைவருக்கும் பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, பதக்கங்களை கழுத்தில் அணிவித்து வந்த நிலையில், அமைச்சர் டிஆர்பி.ராஜாவின் மகன் சூரிய ராஜ பாலு கழுத்தில் அணிவிக்க மறுத்து, கையில் வாங்கிக் கொண்டார். பின்னர், அண்ணாமலையுடன் சேர்ந்து நின்று படம் எடுத்துக் கொண்டு சென்றார்.

# மூளை அமீபா பாதிப்பு தொற்று நோய் அல்ல; பதற்றம் வேண்டாம்



“மூளை அமீபா பாதிப்பு, தொற்று நோய் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். எனவே பெரிய அளவில் பதற்றமடைய வேண்டியதில்லை.” என அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரி வித்துள்ளார்.

சென்னையில் இன்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது மூளைக்காய்ச்சல் குறித்தான கேள்விக்கு பதிலளித்த அவர், “கேரளாவில் 18 பேர் மூளை தின்னும் அமீபா நோய் பாதிப்பிற்குள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாக சொல்லப்பட்டுள்ளது.

கடந்த 1 வாரகால மாகவே இந்த நோயின் தன்மை கூடியிருக்கிறது. நோய் பாதிப்பிற்கான காரணங்களை மருத்துவ வல்லுநர்களிடம் கேட்கும்போது, அசுத்தமான நீர், மாசுபட்ட நீர் நிரம்பிய குளம், குட்டைகள், நீர்நிலைகளில் தேங்கிய சேறுகளில் தான் அமீபா உருவாவதாக சொல்லப்படுகிறது.

அத்தகைய குளம், குட்டைகளில் குளிக்கும்போது மூக்கின் வழியே அமீபா சென்று மூளையை பாதித்து, மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு மரணங்கள் நிகழ்கிறது. இது தொற்று நோய் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். எனவே பெரிய அளவில் பதற்றமடைய வேண்டியதில்லை.

அசுத்தமான குளம் குட்டைகளில் குளித்த தால்தான் நேக்லேரியா ஃபோவ்லேரி (Naegeleria Fowleri) என்ற அமீபா ஏற்பட்டு, அரிதான மூளைக் காய்ச்சல் நோயான, முதன்மை அமீபிக் மெனிங் என்சஃபலிட்டிஸ் **(Primary Amoebic Meningo-Encephalitis (PAM)**

நோய் பாதிப்பு ஏற்படுகிறது.

இந்த நோய் பாதிப் பிற்குள் ளானவர்களுக்கு கடுமையான தலைவலி, காய்ச்சல், வாந்தி, மன குழப்பநிலை, கழுத்து வலி, மயக்கங்கள் போன்ற பாதிப்புகள் ஏற்படுகிறது. கேரள மாநில சுகாதாரத்துறை நோய் பாதிப்பிற்குள் ளானவர்களுக்கு சிறப்பான சிகிச்சைகளை வழங்கி நோய் பாதிப்பிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களுக்கு அறிவுறு த்துவது என்னவென்றால் குளம் மற்றும் குட்டைகள், பராமரிப்பு இல்லாத நீச்சல் குளங்களில் குளிப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது'' என்று தெரி வித்துள்ளார்.

பின்னர் தெருநாய்க்கடி தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், ''தெருநாய்கள் பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் கருத்துகள் மாறுபட்டு உள்ளது. தெருநாய்களுக்கு கருத்தடை செய்து அதனை பிடித்த பகுதிகளில் விட்டுவிடுவது மட்டுமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையாகும். முதல்வர் தெருநாய்க்கடி சம்பவங்கள் குறித்து விவாதிப்பதற்காக பல்வேறு துறைகள் ஒருங்கிணைத்து கூட்டம் ஒன்றை நடத்தினார்.

அதில் தெருநாய்கள் பராமரிப்பதற்காக குடில்கள் அமைக்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு வட்டார அரசு மருத்துவமனை, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே மருந்துகள் வழங்கப்பட்டு வந்தது.

இந்த அரசு அமைந்த பிறகு தான் தமிழ்நாட்டு மருத்துவத்துறை வரலாற்றில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய ங்களில் நாய்கடிக்கு ARV மருந்துகள், பாம்புக்கடிக்கு ASV மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது'' இவ்வாறு அவர் தெரி வித்தார்.

## அமெரிக்காவின் வரி விதிப்பு: ரூ.1,000 கோடி இறால் ஏற்றுமதி பாதிப்பு

அமெரிக்காவின் 50% வரி விதிப்பால் ரூ.1,000 கோடி அளவுக்கு இறால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் கவலை தெரி வித்துள்ளனர். விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் 80க்கும் மேற்பட்ட இறால் பண்ணைகள் உள்ளன. இறால் பண்ணைகளில் இருந்து பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அமெரிக்காவுக்கு மட்டும் 60% வரை இறால் ஏற்றுமதி செய்யப்படுவதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். இந்நிலையில், அமெரிக்காவின் வரி விதிப்பால் ரூ.1,000 கோடி அளவுக்கு



இறால் ஏற்றுமதி செய்ய முடியாமல் தேக்கமடைந்துள்ளது. இறால் தேக்கம் அடைந்து வந்தால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# ஆளுநரும், முதல்வரும் ஒரே உறையில் இரண்டு வாள்களாக இருக்க முடியாது

## உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வாதம்



**மாநில அரசு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரத்தில் ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதித்தது தொடர்பான வழக்கில், 'ஆளுநரும் முதல்வரும் ஒரே உறையில் இரண்டு வாள்களாக இருக்க முடியாது' என உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வாதிட்டுள்ளது.**

மாநில அரசு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரத்தில் ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதித்தது தொடர்பான விவகாரத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு எழுப்பிய 14 கேள்விகள் தொடர்பான வழக்கின் விசாரணை உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்களை நீதித்துறை காலக்கெடுவிற்குள் கட்டுப்படுத்த முடியாது என மத்திய அரசும், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சத்தீ

# ஆளுநர் ஒரு வசதி செய்பவர் மட்டுமே, தலையிடுபவர் அல்ல, குழப்பத்தை ஏற்படுத்துபவர் அல்ல.

ஸ்கர், கோவா, ஹரி யானா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் போன்ற மாநிலங்களும் வாதிட்டன.

இந்த வழக்கில் தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி ஆஜரானார். அவர் தனது வாதத்தில், “ பொறுப்புள்ள அரசாங் கங்களில், ஆளுநரின் விருப்புரிமைக்கு இடமி ல்லை. ஆளுநருக்கு உள்ள தனிப்பட்ட விருப் புரிமை என்பது குழப்ப த்தையே உருவாக்கும்.

பிரிவு 163 என்பது அமைச்சரவையின் ஆலோசனையை எதிர்த்து அல்லது இல்லாமல் செயல்பட ஆளுநருக்கு பொது விருப்புரிமை அதிகாரத் தை வழங்கவில்லை. பிரிவு 163, ஆளுநர், அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் மட்டுமே செயல்பட வேண்டும் என்று கூறுகிறது.

அம்பேத்கரின் கருத்துகளை ஏற்றுக்கொ ள்ளும் நீதிபதி எம்.எம்.புஞ்சி கமிஷன் அறிக்கையின்படி, ‘அரசியலமைப்பின் கீழ் ஆளுநருக்கு அவரே செய்யக்கூடிய எந்தப் பணிகளும் இல்லை; ஆளுநர், எந்த குறிப்பிட்ட சூழ்நிலையிலும், அமைச்ச கத்தை மீற முடியாது’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் சட்டப்பேரவை செயல்பாட்டில் ஒரு பகுதியாக இருக்கிறார், ஆனால் அவர் மாநில சட்டப் பேரவையின் ஒரு பகுதியாக இல்லை. அவர் ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் அல்ல. சட்டப்பேரவை செயல்பாட்டில் அவருக்கு ஒரு பங்கு இருக்கலாம். அதுவும் அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில்தான் உள்ளது. ஆனால், அவர் மாநில நிர்வாகம் அல்லது சட்டமன்றத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது.

ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவை ஆளுநரைக் கொண்டிருக்கும் என்று பிரிவு 168 கூறினாலும், மாநில சட்டப்பேரவையின் எந்த அவையிலும் ஆளுநருக்கு எந்த பொறுப்பும் ஒதுக்கப்படவில்லை. எனவே ஆளுநர் ஒரு சூப்பர் முதல்வரைப் போல செயல்பட முடியாது.

ஜனநாயகம் மற்றும் நாட ாளுமன்ற அரசாங்கத்தின் நலனுக்காக, மாநிலத்தின் நல்லாட்சிக்கு முதல்வர் மற்றும் அவரது அமைச் சரவை பொறுப்பேற்க வேண்டும் என்று பி.ஆர்.அம்பேத்கர் கூறுகிறார். அதற்கு ஆளுநர் ஒரு வசதி செய்பவர் மட்டுமே, தலையிடுபவர் அல்ல, குழப்பத்தை ஏற்படுத்துபவர் அல்ல. ஒரே உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியாது. ஆளுநரும் முதல்வரும் ஒரே உறையில் இரண்டு வாள்களாக இருக்க முடியாது.

ஆளுநருக்கு மூன்று வழிகள் மட்டுமே உள்ளன, அவர் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க விரும்பவில்லை என்றால், அவர் அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனைக்கு கட்டுப்படாமல் கூட, மசோதாவை ஒரு முறை மாநில சட்டப்பேரவைக்கு திருப்பி அனுப்பலாம் அல்லது ஆளுநர் அந்த மசோதாவை குடியரசுத் தலைவரிடம் அனுப்பலாம். ஒப்புதலை நிறுத்தி வைப்பதன் மூலம் மசோதாவை தோல்வியடையச் செய்வதற்கான நான்காவது வழி, ஐந்தாவது வழிகள் இல்லை’ எனத் தெரிவித்தார்.

# செல்ஃபி எடுக்கும்போது ஏற்படும் உயிரிழப்பு: இந்தியா முதலிடம் என ஆய்வில் தகவல்

செல்ஃபி எடுக்கும்போது ஏற்படும் எதிர்பாராத அசம்பாவிதத்தால் உயிரிழந்தவர்கள் குறித்து அவ்வப்போது நாம் செய்திகளில் பார்ப்பது உண்டு. இந்த சூழலில் இது குறித்து அமெரிக்க தனியார் நிறுவனம் ஒன்று ஆய்வு மேற்கொண்டுள்ளது. அதில் உலக அளவில் இந்தியாவில்தான் செல்ஃபி உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் கடந்த 2014 மார்ச் முதல் 2025 மே மாதம் வரையில் ஏற்பட்ட செல்ஃபி உயிரிழப்பு தரவுகளை அடிப்படையாக கொண்டு 'தி பார்பர் லா ஃபிர்ம்' என்ற நிறுவனம் இந்த ஆய்வை நடத்தியுள்ளது. கூகுளில் கிடைத்த தகவல்கள் தான் இந்த ஆய்வின் அடிப்படை.

அந்த வகையில் இந்த குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்தியாவில் மட்டும் சுமார் 271 விபத்துகள் செல்ஃபி எடுக்கும்போது ஏற்பட்டுள்ளது. அதில் 214 பேர் உயிரிழந்துள்ளனர். 57 பேர் காயமடைந்துள்ளனர். ஒட்டுமொத்தமாக இந்த காலகட்டத்தில் செல்ஃபி மோகத்தால் ஏற்பட்ட வியாபிரீதங்களில் 42.1% இந்தியாவில் நடந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மக்கள் கூட்டம் அதிகம் நிறைந்த பகுதி, ரயில் பாதை அல்லது மலை உச்சி, உயரமான கட்டிடம் என ஆபத்து நிறைந்த இடங்கள், இந்தியாவில் நிலவும் சமூக வலைதள மோகம் உள்ளிட்டவை இதற்கு காரணம் என ஆய்வை மேற்கொண்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்தியாவுக்கு அடுத்த படியாக அமெரிக்காவில் 37, ரஷ்யாவில் 19, பாக்சிதானில் 16, ஆஸ்திரேலியாவில் 13 என செல்ஃபி எடுக்கும்போது உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்.

பொதுநலன் கருதியோ அல்லது பாதுகாப்பு கருதியோ அரசு பல இடங்களில் போட்டோ எடுக்கத் தடை விதித்துள்ளது. அதுபோல சுற்றுலாத் தலங்களிலும் பிற ஆபத்தான முனைகளிலும் செல்ஃபி எடுக்கவும் தடைவிதித்து, 'இது செல்ஃபி தடைசெய்யப்பட்ட பகுதி' என அறிவிப்புச் செய்யவேண்டும். இதையும் மீறி ஆபத்தான பகுதிகளில் செல்ஃபி எடுத்து அதை சமூக வலைதளங்களில் பதிவிடுவோரை கண்காணித்து கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என செல்ஃபிக்கு எதிரான குரல்கள் வலுக்கின்றன.

# மாநில மொழி தெரியாத ஊழியர்களே ரயில் விபத்துகளுக்கு காரணம்

## சு.வெங்கடேசன் எம்.பி

சமீபகாலங்களில் ரயில்வேயில் நடைபெற்ற பல விபத்துகளுக்கு முக்கியக் காரணம், அந்த மாநில மொழி தெரியாத ஊழியர்கள் பணியில் இருப்பதே ஆகும் என மதுரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்பி சு.வெங்கடேசன் தெரிவித்தார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று பொது விநியோகத் திட்டத்தில் உள்ள நிறைகுறைகள் சம்பந்தமாக கலந்தாலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பொது விநியோக திட்டத்தில் உள்ள நிறைகுறைகளை, மதுரை மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன், பொது விநியோகத் துறை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த வாரம் தெற்கு ரயில்வேயில் ஊழியர்கள் பதவி உயர்வுக்கான ஒரு தேர்வு நடைபெற்றது. அதில் ஆங்கிலம், இந்தி மற்றும் மாநில மொழிகள் இருக்க வேண்டும் என்பது அடிப்படையான விதி. ஆனால் தெற்கு ரயில்வே நடத்திய அந்த பதவி உயர்வுக்கான தேர்வின் வினாத்தாளில் ஆங்கிலம் மற்றும் இந்தி மட்டுமே இருந்தது. தமிழ் மொழி இல்லை. தேர்வு நடந்து முடிந்துவிட்டது.

இந்த தேர்வுக்கு எதிராக ரயில்வே அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். உடனடியாக இந்த தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும்.



தமிழில் வினாத்தாள் தயாரித்து தேர்வை மீண்டும் நடத்த வேண்டும் என்று கோரியிருக்கிறேன். எனவே அந்த தேர்வு ரத்து செய்யப்படுவதற்கான முடிவு சில நாட்களில் வெளிவரும் என்று எதிர்பார்க்கின்றேன். தொடர்ந்து நேற்று தெற்கு ரயில்வேயில் அடுத்த சுற்றறிக்கை வெளிவந்துள்ளது.

இந்தியில் பயிற்சி மற்றும் ஆளுமையை வளர்த்துக்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மொழி பிரச்சினை என்பது அலு வலக சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. சமீப காலங்களில் ரயில்வேயில் நடைபெற்ற பல விபத்துகளுக்கான முக்கிய காரணம், அந்த மாநில மொழி தெரியாத ஊழியர்கள் பணியில் இருப்பதே ஆகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# குலசேகரன்பட்டினம் ஏவுதளத்தில் இருந்து அடுத்த ஆண்டு நவம்பரில் ராக்கெட் ஏவப்படும்

## இஸ்ரோ தலைவர் நாராயணன் தகவல்




குலசேகரன்பட்டினம் ஏவுதளத்தில் இருந்து அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் ராக்கெட் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்தார்.

இஸ்ரோ சார்பில் நாட்டின் 2வது ராக்கெட் ஏவுதளம் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் அமைக்கப்படுகிறது. இங்கு 2,292 ஏக்கர் பரப்பில் ரூ.986 கோடியில் ராக்கெட் ஏவுதளம் அமைக்க பிரதமர் மோடி கடந்த 2024 பிப். 28ல் அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, குலசேகரன்பட்டினத்தில் பல்வேறு கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் ரூ.100 கோடியில் ராக்கெட் லாஞ்ச் பேட் எனப்படும் ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான பூமி பூஜை நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தலைமை வகித்தார். ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான பணிகளை தொடங்கிவைத்த இஸ்ரோ தலைவர் வி.நாராயணன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து ஆண்டுக்கு 25க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள்கள் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. இஸ்ரோவுக்கு ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் மட்டுமே ராக்கெட் ஏவுதளம் அமைந்துள்ளது.

அங்கிருந்து நமது செயற்கைக்கோள்கள் மற்றும் பல்வேறு உலகநாடுகளின் செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டு வருகின்றன. பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி போன்ற ராக்கெட்டுகளின் உதவியோடு பல செயற்கைக்கோள்கள் இங்கிருந்து விண்ணில் ஏவப்படுகின்றன. தற்போது, நாட்டின் 2வது ஏவுதளத்தை அமைக்கும் பணியில் இஸ்ரோ ஈடுபட்டிருக்கிறது. அதற்காக, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரன்பட்டினம் தேர்வு

செய்யப்பட்டுள்ளது. இங்கு ராக்கெட் ஏவுதளம் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்து, கடந்த ஆண்டு பிப்ரவரிமாதம் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

கடந்த 6 மாதங்களாக ராக்கெட் ஏவுதளம் அமைக்க உள்ள இடத்தில் உட்கட்டமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா தற்போது நடைபெற்றுள்ளது. தற்போது ரூ.100 கோடியில் முக்கியமாக 33 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்தில் குலசேகரன்பட்டினத்தில் இருந்து ராக்கெட் ஏவப்படும்.

இதற்கான இடம் வழங்கிய தமிழக அரசுக்கும், தமிழக முதல்வருக்கும் நன்றி. அடுத்த 3 மாத காலத்துக்குள் சிறிய ரக ராக்கெட் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இங்கிருந்து 500 கிலோ எடை கொண்ட ராக்கெட் விண்ணில் ஏவப்படும். தனியார் ராக்கெட்டுகளும் இங்கிருந்து ஏவப்படும். அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் அனைத்து பணிகளும் நிறைவடையும். குலசேகரன்பட்டினம் இந்திய வரைபடத்தில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. இங்கிருந்து ஆண்டுக்கு 25 ராக்கெட்கள் வரை ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில், ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவன் விண்வெளி மைய இயக்குநர்கள் ராஜராஜன், பத்மகுமார், மகேந்திரகிரி இஸ்ரோ உந்துவிசை வளாக இயக்குநர் ஆசீர் பாக்கியராஜ், குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதள திட்ட இயக்குநர் சரவண பெருமாள்,எஸ்.பி. ஆல்பர்ட் ஜான், மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன், திருச்செந்தூர் டிஎஸ்பி மகேஷ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இந்தியா அளித்த எச்சரிக்கையால் உயிர் தப்பிய 1.5 லட்சம் பாகிஸ்தானியர்

இந்தியாவின் முன்கூட்டியே அளித்த வெள்ள எச்சரிக்கையால் 1.5 லட்சம் பாகிஸ்தானியர்கள் உயிர் தப்பி உள்ளனர்.

காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானை நோக்கி பாயும் ராவி, சட்லெஜ், செனாப் ஆகிய ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் ஜம்மு காஷ்மீரில் உள்ள அணைகள் முழு கொள்ளளவை எட்டியதால் திறக்கப்பட்டுள்ளன. இதனால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என கடந்த திங்கள் கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை என தொடர்ந்து பாகிஸ்தான் அரசுக்கு இந்திய அரசு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்தது. இதன் அடிப்படையில், ஆற்றங்கரையோர கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1.5 லட்சம் பேர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். இதனால் அவர்கள் உயிர் தப்பி உள்ளனர்.

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், இந்திய அரசு மனிதாபிமான அடிப்படையில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்ததால் 1.5 லட்சம் பாகிஸ்தானியர்கள் உயிர் தப்பி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலும் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பசில்கா மாவட்டம் தேஜா ரோஹேலா கிராமத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான். அவனைக் காப்பாற்ற முயன்ற மேலும் 3 பேர் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர். இதனிடையே, அவர்கள் வழியில் இருந்த யூகளிப்டஸ் மரங்களில் ஏறிக் கொண்டனர். இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் 4 பேரையும் பத்திரமாக மீட்டனர்.

# இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி உயர்வுக்கு உள்நாட்டு தேவை அதிகரிப்பு காரணமல்ல

ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்கும் கச்சா எண்ணெய் அளவு உயர்வுக்கு உள்நாட்டு தேவை அதிகரிப்பு காரண மல்ல என்று வெள்ளை மாளிகை வர்த்தக ஆலோசகர் பீட்டர் நவரோ தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்கு வதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள ட்ரம்ப் நிர்வாகத்தின் வர்த்தகம் மற்றும் உற்பத்திக்கான மூத்த ஆலோசகர் பீட்டர் நவரோ, உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடர இந்தியாதான் நிதி உதவி அளிக்கிறது என குற்றம் சாட்டி நேற்று ஒரு பதிவிட்டிருந்தார். அமைதிக்கான பாதை ஓரளவு புதுடெல்லி வழியாகவே செல்கிறது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இன்று அவர் வெளி யிட்டுள்ள தொடர் சமூக ஊடக பதிவுகளில், இந்தியாவை மேலும் கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவுகளில், ‘‘உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, அமெரிக்காவின் மூலோபாய பங்காளியாக நடத்தப்பட விரும்பினால், அது அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

இந்தியாவின் அதிக வரி விதிப்புக்கு பதிலளிக்கும் நோக்கில் 25% வரியையும், தேசிய பாதுகாப்புக்காக கூடுதலாக 25% வரியையும் அமெரிக்கா விதிக்கிறது. இந்தியாவின் பெரிய எண்ணெய் லாபி, உலகின் மிகப்பெரிய ஜனநா யகத்தை ரஷ்யாவுக்கான ஒரு பெரிய சுத்திகரிப்பு மையமாகவும், மோசடியாக பணம் ஈட்டும் மையமாகவும் மாற்றியுள்ளது.

இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள்



மலிவான விலைக்கு ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்கி அவற்றை சுத்திகரித்து, ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசிய கண்டங்களில் உள்ள நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுப்பதற்கு முன்பு இந்தியாவின் எண்ணெய் இறக்குமதியில் ரஷ்யாவின் பங்கு ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே இருந்தது. இன்று அது 30%க்கும் அதிகமாக உள்ளது. நாள் ஒன்றுக்கு இந்தியா ரஷ்யாவிடம் இருந்து 15 லட்சம் பீப்பாய்களுக்கு மேல் எண்ணெயை வாங்குகிறது.

இந்த உயர்வுக்கு உள்நாட்டு தேவை அதிகரிப்பு காரணமல்ல. இந்தியா இப்போது நாள் ஒன்றுக்கு 10 லட்சம் பீப்பாய்களுக்கு மேல் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியத்தை ஏற்றுமதி செய்கிறது. அதாவது, ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயில் பாதிக்கும் மேல் ஏற்றுமதியாகிறது. இதனால், ஒரு பக்கம் இந்தியாவில் உள்ள எண்ணெய் நிறுவனங்களும் மறுபக்கம் ரஷ்யாவும் பலனடைந்து வருகிறார்கள்.

இந்தியாவுடன் அமெரிக்காவுக்கு 50 பில்லியன் டாலர் வர்த்தக பற்றாக்குறை உள்ளது. ரஷ்யாவிடம் இருந்து கச்சா

எண்ணெயை வாங்க இந்தியா அமெரிக்க டாலரை பயன்படுத்துகிறது. மேலும், ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்களை தொடர்ந்து வாங்குகிறது. இந்தியாவின் இத்தகைய செயல்கள் அமெரிக்காவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

உக்ரைன் ஆயுதங் களைப் பெற அமெரிக்கா செலவிடுகிறது. அமெரிக்க சந்தைகளில் இந்திய பொருட்கள் விற்கப்படுகின்றன. ஆனால், இந்திய சந்தை அமெரிக் காவுக்காக திறக்கப்படவில்லை. அதிக வரி விகிதம் மற்றும் தடைகள் காரணமாக அமெரிக்கப் பொருட்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.'' என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்தியாவுக்கு எதிராக அதிக வரி விதிக்கப்பட்டதற்கு அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் வெளியுறவுக் கொள்கை குழு கண்டனம் தெரிவித்துள்ளது. ''ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவைவிட அதிக கச்சா எண்ணெய் வாங்கும் சீனா உள்ளிட்ட நாடுகள் மீது தடைகளை விதிப்பதற்குப் பதிலாக இந்தியா மீது விதித்திருப்பது இரு நாட்டு உறவை நாசமாக்கும் செயல். இது உக்ரைனைப் பற்றியது அல்ல.'' என அக்குழு தெரிவித்துள்ளது.

# இந்தியா 2038ல் 2வது பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும்: எர்ன்ஸ்ட் அன்ட் யங் அறிக்கையில் தகவல்



வரும் 2038ல் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி உலகின் 2வது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் என எர்ன்ஸ்ட் அன்ட் யங் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எர்ன்ஸ்ட் அன்ட் யங் ஆகஸ்ட் மாதம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் வலுவான பொருளாதார கட்டமைப்பு, சாதகமான மக்கள் தொகை மற்றும் தொடர்ச்சியான தொழில் துறை சீர்திருத்தங்கள் ஆகியவை நீண்டகால வளர்ச்சியை ஊக்குவிப்பதாக உள்ளன. குறிப்பாக, அதிக இளைஞர் சக்தி (சராசரி வயது 28.8), பொதுமக்களின் அதிக சேமிப்பு மற்றும் முதலீட்டு விகிதம், அரசின் கடன் மற்றும் ஜிடிபி இடைவெளி குறைந்து வருவது, சீரான பொருளாதார வளர்ச்சி ஆகியவை இந்தியாவுக்கு சாதகமான அம்சமாக பார்க்கப்படுகிறது.

இந்தியா இப்போது 4.19 ட்ரில்லியன் டாலர் ஜிடிபியுடன் (வாங்கும் சக்தி அடிப்படையில்) உலகின் 4வது பெரிய பொருளாதார நாடாக உள்ளது. இது விரைவில் 3வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுப்பதுடன், 2030 வாக்கில் 20.7 ட்ரில்லியன் டாலரை எட்டும். வரும் 2030 வரையில் இந்தியாவின் ஜிடிபி சராசரியாக ஆண்டுக்கு 6.5% ஆகவும் அமெரிக்காவின் ஜிடிபி 2.1% ஆகவும் இருக்கும் என ஐஎம்எப் கணித்துள்ளது. இது 2030க்கு பிறகும் தொடர்ந்தால், வரும் 2038ம் ஆண்டுக்குள் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி இந்தியாவின் ஜிடிபி 34.2 ட்ரில்லியன் டாலரை எட்டி உலகின் 2வது பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# பிஹாருக்கு ஏற்பட்ட நிலை தமிழகத்துக்கு ஏற்படக் கூடாது

வாக்காளர் சிறப்பு திருத்தத்தால் பிஹாருக்கு ஏற்பட்டுள்ள நிலை தமிழகத்துக்கு ஏற்படக் கூடாது என்பதற்காக, இப்போதே விழிப்புணர்வைப் பெற்று நாம் அதற்காக தயாராக வேண்டும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற திமுக எம்.பி. என்.ஆர். இளங்கோவின் மகள் இராகவி சச்சிந்தர் திருமணத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நடத்தினார்.

இதனை தொடர்ந்து பேசிய அவர், “இன்றைக்கு நாடு என்ன மாதிரியான பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், பிஹாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு வாக்காளர் திருத்தம் என்ன மாதிரியான பிரச்சினைகளை

ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் அதிகம் இங்கு விளக்கி சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

அதற்காகதான், ராகுல் காந்தி ஒரு நடைபயணத்தை மேற்கொண்டிருக்கிறார். மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய சூழல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு, நானும் பிஹார் சென்று, வாக்காளர் உரிமைப் பயணம் என்று ராகுல் காந்தி நடத்தி வரும் அந்த விழிப்புணர்வு பயணத்தில் நான் பங்கேற்றேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

இந்த நிலை தமிழ்நாட்டில் ஏற்படக் கூடாது என்பதற்காக, இப்போதே நம்முடைய விழிப்புணர்வைப்பெற்று நாம் அதற்காக தயாராக வேண்டும் என்பதற்காகதான் அதை தடுத்து நிறுத்துவதற்கான அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டிருப்பவர்தான் நம்முடைய என்.ஆர்.இளங்கோ. அதற்காக இந்த நேரத்தில் நான் தலைமைக் கழகத்தின் சார்பில் மனதார அவரை பாராட்ட, வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய உரிமை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தி, அதில் நீதியரசர்களை பங்கேற்க வைத்து பல ஆன்றோர்கள், சான்றோர்களையெல்லாம் அதில் பங்கேற்க வைத்து அதையும் நடத்திக் கொண்டு இருக்கிறார்.

நாளைய தினம் நான் ஜெர்மனி இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஒரு வார கால பயணமாக மேற்கொள்ள இருக்கிறேன். நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டிற்கு இதுவரை சுமார் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான தொழில்களை நாம் ஈர்த்திருக்கிறோம்.

இதற்கான என்னுடைய வெளிநாட்டு பயணங்களின்போது, முதலீட்டாளர்களும் தொழில்நிறுவனங்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய மனப்பூர்வமாக ஆர்வம் காட்டுவதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

இப்போது இந்தப் பயணத்தில் என்ன திட்டமிட்டிருக்கிறோம் என்றால், அதைப்பற்றி நாளைய தினம் நான் விமானத்தில் ஏறி புறப்படுவதற்கு முன்பு நிச்சயமாக பத்திரிகையாளர்களை சந்தித்து அந்த விவரங்களையெல்லாம் சொல்லப்போகிறேன். ஆனால் அதற்கு முன்பு நடைபெறக்கூடிய இந்த திருமண விழாவில், ஒரு முக்கியமான நிகழ்வை அறிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்ச்சமூகம் சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து நடைபோடுவதற்கு காரணம், தந்தை பெரியார். தந்தை பெரியாரின் சிந்தனையை உலகு தொழும் காட்சியை நாம் இந்தப் பயணத்தில் பார்க்கப்போகிறோம்.

உலகின் மிகப்பெரிய அறிஞர்களைத் தந்த, புகழ்மிக்க அறிவுசார் நிறுவனமாகப் போற்றப்படும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படம் திறக்கப்பட இருக்கிறது. அதை என்னுடைய திருக்கரங்களால் திறந்துவைக்க இருக்கிறேன் என்று எண்ணிப்பார்க்கும்போது நான் இப்போதே மகிழ்ச்சிக் கடலில் மிதந்துக்கொண்டு இருக்கிறேன்.

தந்தை பெரியார் தமிழ்நாட்டில் பிறந்து, தமிழில் பேசி எழுதியிருந்தாலும், அவருடைய சிந்தனைகள் இந்த உலகத்திற்கானது; அனைவருக்கும் பொதுவானது.

அவர் வலியுறுத்திய, சுயமரியாதை பகுத்தறிவு பெண் விடுதலை ஏற்றத்தாழ்வு மறுப்பு தன்னம்பிக்கை அனைவரும் சமம் ஆகிய கருத்துகளுக்கு எல்லைகள் கிடையாது. இவை உலக மக்கள் அனைவரும் பொதுவான வகையில் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட அறிவுமேதை உலகளவில் அடையாளம் காணப்பட்டு, அங்கீகரிக்கப்படுவது நம்முடைய தமிழ்நாட்டிற்கு பெருமை" எனத் தெரிவித்தார்

# பெண்கள் தொழில் தொடங்க ரூ.2 லட்சம் வரை நிதியுதவி: பிஹார் முதல்வர் நிதிஷ்குமார் அறிவிப்பு

பிஹார் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு பெண் தங்கள் விருப்பப்படி தொழில் தொடங்க நிதி உதவி வழங்கும் திட்டத்தை தொடங்குவதாக முதல்வர் நிதிஷ் குமார் அறிவித்தார்.

"முக்கியமந்திரி மகிளா ரோஜ்கர் யோஜனா" எனும் முதலமைச்சர் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெண்களுக்கான புதிய திட்டத்தை தொடங்கவுள்ளதாக பிஹார் முதல்வர் நிதிஷ்குமார் அறிவித்தார். பிஹாரில் விரைவில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்த திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பெண்ணுக்கு அவர்கள் விரும்பும் தொழிலை செய்வதற்காக நிதி உதவி வழங்கப்படும். இது தொடர்பான முன்மொழிவுவுக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக நிதிஷ் குமார் கூறினார்.

இதுகுறித்து நிதிஷ்குமார் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "2005 ஆம் ஆண்டு நாங்கள் முதன்முதலில் அரசாங்கத்தை அமைத்ததிலிருந்து, பெண்கள் அதிகாரமளிப்புக்காக விரிவாக உழைத்து வருகிறோம், அவர்களை தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்ற பல முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

இன்று, கடின உழைப்பின் மூலம், பெண்கள் பிஹாரின் முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாமல், அவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலையையும் வலுப்படுத்துகிறார்கள். இந்த சூழலில், பெண்களின் நலனுக்காக ஒரு முக்கியமான மற்றும் முன்னோடியான முடிவை நாங்கள் இப்போது எடுத்துள்ளோம். இது நேர்மறையான நீண்டகால பலன்களை



வழங்கும்.

முதல்வர் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு பெண்ணுக்கு சுயதொழிலைத் தொடங்க முதல் தவணையாக ரூ.10,000 வழங்கப்படும். வரும் செப்டம்பர் மாதம் முதல் அவர்களின் வங்கிக் கணக்குகளில் இந்த தொகை நேரடியாக வரவு வைக்கப்படும்.

ஆறு மாதத்துக்குப் பிறகு, ஒரு மதிப்பீடு நடத்தப்படும், அதன் பிறகு தேவைப்பட்டால் சிறப்பாக தொழில் செய்யும் பெண்களுக்கு ரூ.2 லட்சம் வரை கூடுதல் உதவி வழங்கப்படும். பெண்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநிலம் முழுவதும், கிராமங்கள் மற்றும் நகரங்களில் சந்தைகள் உருவாக்கப்படும்.

நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுவசதித் துறையின் ஆதரவுடன், மாநிலத்தின் கிராமப்புற மேம்பாட்டுத் துறையின் கீழ் இதற்கான விண்ணப்ப செயல்முறை விரைவில் தொடங்கும். இந்தத் திட்டத்தை செயல்படுத்துவது பெண்களின் நிலையை மேலும் வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மாநிலத்திற்குள் சிறந்த வேலை வாய்ப்புகளையும் வழங்கும். இனி, மக்கள் வேலைவாய்ப்புக்காக மாநிலத்தை விட்டு வெளியேற வேண்டிய அவசியமில்லை என்றும் நான் நம்புகிறேன்" என்று கூறினார்.

# அமெரிக்க பொருட்களை புறக்கணிக்க ஹெச்.ராஜா வேண்டுகோள்




**அமெரிக்க பொருட்களை புறக்கணிக்குமாறு பாஜக தேசிய செயற் குழு உறுப்பினர் ஹெச். ராஜா கூறினார்.**

இந்து முன்னணி சார்பில் ஈரோடு மாவட்டம் கோபியில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில் பங்கேற்ற ஹெச்.ராஜா,பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா 50 சதவீதம் வரிவிதித்துள்ளது. இதனால், முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் காலத்தில் கொண்டுவரபட்ட 'காட்' உடன்படிக்கை தோற்றுப்போயுள்ளது. நாட்டு மக்கள் சுதேசி உற்பத்திப் பொருட்களை வாங்க வேண்டும். அமெரிக்க பொருட்களை ஆன்லைன் மூலம் வாங்க மாட்டோம் என்று அனைவரும் முடிவெடுக்க வேண்டும்.

அமெரிக்காவின் பொருளாதார நடவடிக்கைக்கு, மற்றொரு பொருளாதார நடவடிக்கை மூலமாக மட்டுமே பதில் கொடுக்க வேண்டும். மற்ற நாடுகளோடு வர்த்தகத்தை அதிகரிப்பதன்மூலமாக, அமெரிக்காவின் வரிவிதிப்பால் ஏற்படக் கூடிய இழப்பை சரி செய்ய முடியும். ஜிஎஸ்டி வரி விதிப்பில் சீர் திருத்தத்தை கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சிறுபான்மையினர் வாக்குகள் மட்டுமே போதும் என தவெக தலைவர் விஜய் முடிவு செய்துள்ளார் என்பது அவரது பேச்சில் தெரியவருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.




Printed by A.MOURIYAN and Published by A.MOURIYAN on behalf of MAKKAL VISARANAI, Tamil Monthly and Printed at J.M. PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.
And Published at No.7/13, Ponmanachemmal Street, M.G.R Nagar, Kalaignar Karunanidhi Nagar, Chennai - 600078. Editor: A.MOURIYAN.


SPACE INTERIORS
FILL YOUR DESIRE TO PERFFCT HOME
◆Modular Kitchen
◆Wardrobe
◆TV Unit
◆Pooja Unit
◆Painting
◆Mosquito Netlon
◆Furniture works
◆False Ceiling
◆PVC Doors
E.Rajesh Kannan DCE
98848 65683
spaceinteriors16@gmail.com
www.spaceinteriors16.com
#13/29, Mavadi Vinayagar Kovil St.. Royapettah, Chennai-600014

MAKKAL VISARANAI, Tamil Monthly. RNI No.: TNTAM44870/2012 SEPTEMBER - 2025
Posted at EGMORE RMS / 1 (Patrika Channel) Registered No.: TN/CC(S)DN/461/22-24, Published 15th of Every Month, Posted Date 19th-25th of Every Month

